தமிழ் மரபு அறக்கட்டளை பன்னாட்டு அமைப்பு

# திணை

Bulletin of Tamil Heritage Foundation *international* - THFi

திருவள்ளுவர் ஆண்டு 2053,
ஐப்பசி/மார்கழி
நவம்பர் 2022 - செய்தி மடல் 30

பொறுப்பாசிரியர்:
குமரன் சுப்ரமணியன் (ஜெர்மனி)

Websites : https://www.tamilheritage.org
https://academy.tamilheritage.org

Google Groups : Mintamil Google Group

Facebook :
Tamil Heritage Foundation
THF Student Heritage Network
Tamil Heritage Foundation Research - Korea India
Der Kural Des Thiruvalluvar
மின்தமிழ்-minTamil

Youtube:
https://www.youtube.com/thfichannel

Instagram:
https://instagram.com/TamilHeritageFoundation

Twitter:
https://twitter.com/HeritageTamil

E-mail: mythforg@gmail.com

THFi - HQ : Germany
Branches : India, Srilanka, Malaysia, Denmark, Norway, France, USA.

Thinai Monthly Newsletter:
https://thf-news.tamilheritage.org/category/thinai

**அன்போ டியைந்த வழக்கென்ப ஆருயிர்க்கு
என்போடியைந்த தொடர்பு**

***(அதிகாரம்: அன்புடைமை; குறள்: 73)***



அனைவருக்கும் வணக்கம்.

அனைவரையும் தமிழ் மரபு அறக்கட்டளையின் 'திணை' மாதாந்திர செய்தி மடலின் வழியாகச் சந்திப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன். நவம்பர் மாதம் தமிழ் மரபு அறக்கட்டளையின் பல்வேறு நிகழ்வுகள் உலகத் தமிழ் மற்றும் வரலாற்று ஆர்வலர்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன. அவை பற்றிய சுருக்கமான செய்திகளை உங்களோடு திணை இதழ் வழியாகப் பகிர்ந்து கொள்கிறேன்.

நவம்பர் மாதத்தில் தமிழர் மரபு, வாழ்வியல், வரலாறு, தொல்லியல் என்ற பல்வேறு பிரிவுகளில் தமிழ் மரபு அறக்கட்டளையின் நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

பொதுவாகவே ஆய்வு மாணவர்களுக்கும் கல்லூரி, பல்கலைக்கழக மாணவர்களுக்கும் பேராசிரியர்களுக்கும் கூட ஆய்வுக் கட்டுரை எழுதுவது எப்படி என்பது ஒரு சவாலாகவே அமைந்து விடுவதுண்டு.

அதனைக் கவனத்தில் கொண்டு 'ஆய்வுக் கட்டுரை எழுதுவது எப்படி' என்ற தலைப்பிலான ஒரு பயிற்சி நிகழ்ச்சியைத் தமிழ் மரபு அறக்கட்டளை உரை நிகழ்ச்சியாக இந்த மாதத்தில் ஏற்பாடு செய்திருந்தோம். ஏராளமான பங்கேற்பாளர்கள் பதிவு செய்து கொண்டு இந்த உரை நிகழ்ச்சியின் வழி பயனடைந்தார்கள்.




தமிழ்நாட்டின் சுற்றுச்சூழலுக்கு உகந்த மரமாகத் திகழ்வது பனைமரம். பனை மரங்கள் தொடர்பான தொழில்கள் மேம்பாடு காண வேண்டும் என்பதைக் கருத்தில் கொண்டு ஒரு விழிப்புணர்வு கலந்துரையாடல் நிகழ்ச்சியாக நவம்பர் மாதத்தில் ஒரு நிகழ்ச்சியும் நடைபெற்றது. பனை மரத்தில் செய்யப்படும் பொருட்கள், கள், பனையேறிகள் பற்றிய கலந்துரையாடல் என இந்த உரை நிகழ்ச்சி பல கோணங்களில் ஆராய்வதாக அமைந்தது.




'மதுரை கல்வெட்டுகளும் தமிழி எழுத்துக்களும்' என்ற தலைப்பில் பேராசிரியர் பாண்டியராஜா அவர்களது காணொளி, இரண்டு பகுதிகளாகப் பதிவு செய்யப்பட்டு இதே நவம்பர் மாதத்தில் அக்காணொளிகள் வெளியிடப்பட்டன.




யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் வரலாற்று சிறப்புமிக்கது அதன் தொல்லியல் துறை. அத்துறையின் ஒரு அங்கமாக கலாநிதி இந்திரபாலா தொல்லியல் அருங்காட்சியகத்தை நவம்பர் மாதத்தில் திறந்து வைத்தனர். இதற்கு முழு பொறுப்பும் ஏற்று இதனை உருவாக்கி அளித்த பேராசிரியர் டாக்டர். புஷ்பரட்ணம் அவர்கள் இந்த அருங்காட்சியகத்தைப் பற்றி விளக்கி கூறும் வகையில் ஒரு உரையை இதே நவம்பர் மாதத்தில் வழங்கினார்.




தமிழ்நாட்டின் எல்லாப் பகுதிகளிலும் புத்தர் சிலைகள் ஆங்காங்கே கவனிப்பாரற்று கிடைக்கின்ற செய்திகளை அடிக்கடி நாம் செய்தி ஊடகங்களில் கடந்து வருகிறோம்.

சோழ நாட்டில் மட்டுமே எங்கெல்லாம் புத்தர் சிலைகள் இருக்கின்றன. அவற்றின் பின்னணி, வரலாறு என கடந்த 30 ஆண்டுகளாகத் தொடர்ச்சியாக ஆய்வு செய்து வரும் ஆய்வாளர் முனைவர் ஜம்புலிங்கம் அவர்கள் ஒரு ஆய்வு உரையை இதே நவம்பர் மாதத்தில் வழங்கினார்.




இப்படி பல்வேறு வகையில் வரலாற்று ஆர்வலர்களுக்கும் தமிழ் ஆய்வாளர்களுக்கும் பயனளிக்கும் பல நிகழ்ச்சிகள் நவம்பர் மாதத்தில் தமிழ் மரபு அறக்கட்டளை பன்னாட்டு அமைப்பு வழி ஏற்பாடு செய்து வழங்கியிருந்தோம். மின்தமிழ்மேடை தமிழ் மரபு அரக்கட்டளையின் காலாண்டு மின்னிதழ் இம்மாதம் வெளியிடப்பட்டது. ஜெர்மனி ஸ்டுட்கார்ட் நகரிலுள்ள லிண்டன் அருங்காட்சியகத்தில் 8.10.2022 அன்று தொடங்கப்பட்ட 6 மாத கால கண்காட்சியை ஒட்டி தமிழ் மரபு அறக்கட்டளை பன்னாட்டு அமைப்பு பெருமையுடன் வெளியிடும் மின்தமிழ்மேடை சிறப்பிதழ் – **“அகம் புறம்”**




ஒவ்வொரு மாதமும் நிகழும் அனைத்து செய்திகளையும் அறிந்து கொள்ள திணை மாத இதழை வாசிப்பீர்.

தமிழ் மரபு அறக்கட்டளை முன்னெடுக்கும் வரலாற்றுப் பாதுகாப்பு மற்றும் விழிப்புணர்வு நடவடிக்கைகளில் இணைந்து தமிழ்ப்பணியாற்ற தமிழ் மரபு அறக்கட்டளை பன்னாட்டு அமைப்பு உங்களை அன்புடன் வரவேற்கின்றது.

தமிழால் இணைவோம்!

அன்புடன்

முனைவர் க. சுபாஷிணி

(தலைவர், தமிழ் மரபு அறக்கட்டளை பன்னாட்டு அமைப்பு)

**தமிழ் மரபு அறக்கட்டளையின்**

**2022 நவம்பர் மாத நிகழ்வுகள்**

திசைக் கூடல் - வாராந்திர உரை நிகழ்ச்சிகள்

| தேதி | நேரம் | கிழமை | உரையாளர் | உரை தலைப்பு |
|---|---|---|---|---|
| 05/11/2022 | 5:00 PM | சனி | முனைவர். க. சுபாஷிணி | **ஆய்வுக் கட்டுரை எழுதுவது எப்படி ? வழிகாட்டி — முனைவர். க. சுபாஷிணி** https://youtu.be/05IKyAZK32Q |
| 12/11/2022 | 7:30 PM | சனி | கலந்துரையாடல் நிகழ்ச்சி | **பனை விடிவு காண்போம்: விழிப்புணர்வுக் கலந்துரையாடல் நிகழ்ச்சி** https://youtu.be/o_eEtRHcEF4 |
| 20/11/2022 | 7:00 PM | ஞாயிறு | பேராசிரியர் புஷ்பரட்ணம் | **யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கலாநிதி கா.இந்திரபாலா தொல்லியல் அருங்காட்சியகம்** https://youtu.be/RUiyEkt9UD8 |
| 26/11/2022 | 6:00 PM | புதன் | முனைவர் பா.ஜம்புலிங்கம் | **சோழ நாட்டில் புத்தர் சிலைகள் —** https://youtu.be/5HIExBtwx94 |

தமிழ் மரபு அறக்கட்டளை பன்னாட்டு அமைப்பு
திணை
Bulletin of Tamil Heritage Foundation *international* - THFi

**தமிழ் மரபு அறக்கட்டளையின்**

**2022 நவம்பர் மாத முக்கிய நிகழ்வுகள்**

**திருவொற்றியூர் கல்விச்சுற்றுலா காணொளிகள் – வெளியீடு**

தமிழ் மரபு அறக்கட்டளை பன்னாட்டு அமைப்பு ஏற்பாடு செய்திருந்த திருவொற்றியூர் கல்விச்சுற்றுலா பிப்ரவரி 20, 2022 மதியம் நடைபெற்றது. தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்து வந்த வரலாற்று ஆர்வலர்கள் பங்கேற்றனர். பல்வேறு வரலாற்றுச் சிறப்புகளைக் கோயில் தொடர்பான செய்திகளை தொல்லியல் துறையில் நீண்ட காலம் பணியாற்றி ஓய்வு பெற்ற முனைவர் பத்மாவதி அவர்கள் விளக்கமளித்தார்கள். அவருடன் துணையாக முனைவர் சசிகலா அவர்களும் வரலாற்றுச் செய்திகளையும் கல்வெட்டுச் செய்திகளையும் வழங்கினார்.




இந்த நிகழ்ச்சி சிறப்பாக நடைபெற உதவிய திருவொற்றியூர் கோவில் நிர்வாகத்தினருக்கும் தமிழ்நாடு இந்து அறநிலையத்துறை அலுவலகத்திற்கும் தமிழ் மரபு அறக்கட்டளையின் நெஞ்சார்ந்த நன்றி.

கோயில் என்பது வழிபாட்டிற்கு மட்டுமே என்ற சிந்தனையிலிருந்து விடுபட்டு திருவொற்றியூர் கோயில் பல்வேறு வரலாற்றுச் செய்திகளைத் தங்கியிருக்கும் ஒரு வரலாற்று ஆவணப் பாதுகாப்பகம் என்ற சிந்தனையை நேற்றைய கல்விச் சுற்றுலா வழங்கியது. இத்தகைய எண்ணற்ற கோயில்கள் தமிழ்நாட்டில் இருக்கின்றன. அவற்றை முறையாக அறிந்து கொள்வதும் அவற்றைப் பாதுகாப்பது அவசியமாகும்.

**திருவொற்றியூர் கல்விச்சுற்றுலா காணொளிகள் — *தொல்லியல் ஆய்வாளர் முனைவர் ஆ.பத்மாவதி***

1: கோயில் வரலாற்றுச் செய்திகள் - https://youtu.be/dZ3xWMb-kTc


2: கல்வெட்டுச் செய்திகள் - https://youtu.be/sF6M7IP6mNc

3: படம்பக்க நாதர் வரலாறு - https://youtu.be/n0Fnt0vzFFs

**2022 நவம்பர் மாத முக்கிய நிகழ்வுகள்**

**மதுரை கல்வெட்டுகளும் தமிழி எழுத்துகளும் — முனைவர் ப. பாண்டியராஜா நேர்காணல் காணொளிகள் – வெளியீடு**

தமிழ் மரபு அரக்கட்டளை அமைப்பு தமிழ் அறிஞர்களின் அனுபவங்களை அவ்வப்போது நேர்காணல் வாயிலாக ஆவணப்படுத்தி தமிழ் ஆர்வலர்களுக்கும் மாணவர்களுக்கும் அறிய தகவல் களஞ்சியமாக சேகரம் செய்துவருகிறது. அந்தவகையில் இம்மாதம் முனைவர் ப. பாண்டியராஜா அவர்களை எமது குழுவினர் நேரில் சந்தித்து சுவையான நேர்காணலை பதிவு செய்துள்ளனர்.




**முனைவர் ப. பாண்டியராஜா**

முன்னாள்:

தலைவர், கணிதத்துறை; இயக்குநர், கணினித் துறை,

துணை முதல்வர், அமெரிக்கன் கல்லூரி, மதுரை, தமிழ்நாடு

37 ஆண்டுகள் அமெரிக்கன் கல்லூரியில் ஆசிரியப்பணி (1964 – 2001)

உடன் தமிழ் மரபு அரக்கட்டளை குழுவினர்:

முனைவர். பாமா

எழுத்தோவியர் திரு நாணா

ஆசிரியை மு. சுலைகா பானு

**மதுரைக் கல்வெட்டுகள்** – https://youtu.be/3VIZOMQoncY

இக்காணொளியில் முனைவர் ப. பாண்டியராஜா அவர்கள் மதுரைக் கல்வெட்டுகள் குறித்த அரிய தகவல்களை நம்முடன் பகிர்ந்து கொள்கிறார்.


**தொல்காப்பியமும் தமிழி எழுத்துகளும்** – https://youtu.be/r_Yv37ECp54

இக்காணொளியில் முனைவர் ப. பாண்டியராஜா அவர்கள் கல்வெட்டுக்களின் தமிழி எழுத்தை தொல்காப்பிய நூற்பாக்களுடன் ஒப்பிட்டு நமக்கு விளக்கம் கூறுகிறார்.

**2022 நவம்பர் மாத முக்கிய நிகழ்வுகள்**

***திரு. ப.யோ. தங்கசுவாமி அவர்களின் 'நட்டாத்தியர் வரலாறு' (1984) – மின்னூல் வெளியீடு***

தமிழ் மரபு அறக்கட்டளை மின்னூலகத்தின் நூல்கள் வரிசையில் திரு. ப.யோ. தங்கசுவாமி அவர்கள் எழுதிய 'நட்டாத்தியர் வரலாறு' (1984) நூல் இம்மாதம் இணைந்தது. நட்டாத்தி நாடார்களின் பரம்பரை வரலாற்றினை, சேர சோழ பாண்டிய மன்னர்களிடம் தொடங்கி இந்நூலாசிரியர் எழுதியுள்ளார். இதற்கு ஆதாரமாகக் கல்வெட்டுகள், பட்டயங்கள் ஆகியவற்றைக் காட்டுகிறார். இந்த நூலாசிரியர் திரு. ப.யோ. தங்கசுவாமி இப்பிரிவைச் சேர்ந்தவர். 102 ஆண்டுகள் வாழ்ந்து மறைந்தவர். காவல் துறை அதிகாரியாகப் பணியாற்றி ஓய்வு பெற்ற பின்னர், ஆய்வு மேற்கொண்டு ஒரு சிறந்த ஆய்வாளருக்கான இயல்புடன் தகவல்களை இந்நூலில் தந்துள்ளார்.




நூல்: **நட்டாத்தியர் வரலாறு (1984)**

ஆசிரியர்: **ப.யோ. தங்கசுவாமி**

Natathiyar Varalaru by Thangaswamy (1984) -THFi EBOOK

http://thf-news.tamilheritage.org/wp-content/uploads/2022/11/Natathiyar-Varalaru-by-Thangaswamy-THFi-EBOOK.pdf

மின்னூலாக்கம் உதவி:

***முனைவர் பெ.சந்திர போஸ்***

**2022 நவம்பர் மாத முக்கிய பகிர்வுகள்**

**“அகம் புறம்” [அக்டோபர் — 2022] மின்தமிழ்மேடை சிறப்பிதழ் வெளியீடு**

மின்தமிழ்மேடை தமிழ் மரபு அரக்கட்டளையின் காலாண்டு மின்னிதழ் இம்மாதம் வெளியிடப்பட்டது. ஜெர்மனி ஸ்டுட்கார்ட் நகரிலுள்ள லிண்டன் அருங்காட்சியகத்தில் 8.10.2022 அன்று தொடங்கப்பட்ட 6 மாத கால கண்காட்சியை ஒட்டி தமிழ் மரபு அறக்கட்டளை பன்னாட்டு அமைப்பு பெருமையுடன் வெளியிடும்

மின்தமிழ்மேடை சிறப்பிதழ்’ – **“அகம் புறம்”**




**https://thf-news.tamilheritage.org/wp-content/uploads/2022/11/Agam-Puram-October-2022.pdf**

**இதழ் பொறுப்பாசிரியர்: முனைவர் தேமொழி**

புகைப்படங்கள்: லிண்டன் அருங்காட்சியகம், முனைவர் க. சுபாஷிணி, திரு. அருள் மெர்வின்

அட்டைப்பட உருவாக்கம்: முனைவர் தேமொழி, திரு.மு.விவேகானந்தன்

**திசைக் கூடல் - வாராந்திர உரை நிகழ்ச்சி**

**ஆய்வுக் கட்டுரை எழுதுவது எப்படி? வழிகாட்டி**

முனைவர். க. சுபாஷிணி
தலைவர், தமிழ் மரபு அரக்கட்டளை பன்னாட்டு அமைப்பு
ஜெர்மனி

திசைக் கூடல் நிகழ்வு #309




நவம்பர் – 5, 2022 – சனி - மாலை 5:00 இந்திய நேரம்

காணொளி : **[https://youtu.be/05IKyAZK32Q](https://youtu.be/05IKyAZK32Q)**

**பனை விடிவு காண்போம்: விழிப்புணர்வுக் கலந்துரையாடல் நிகழ்ச்சி**

கலந்துரையாடல் நிகழ்ச்சி

| | | |
|---|---|---|
| திருமிகு. காட்சன் சாமுவேல்<br>பனை ஆர்வலர், அழுவார் சாரா உறுப்பினர்<br>தமிழ்நாடு பனைமரத் தொழிலாளர்கள் நலவாரியம் | திருமிகு. பாண்டியன்<br>பனையேறி<br>விழுப்புரம், தமிழ்நாடு | திருமிகு. தீபன்<br>வழக்கறிஞர்<br>சென்னை, தமிழ்நாடு |

திசைக் கூடல் நிகழ்வு #310




நவம்பர் – 12, 2022 – சனி மாலை 07:30 இந்திய நேரம்

காணொளி : **[https://youtu.be/o_eEtRHcEF4](https://youtu.be/o_eEtRHcEF4)**

**யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கலாநிதி கா.இந்திரபாலா தொல்லியல் அருங்காட்சியகம்**

பேராசிரியர் புஷ்பரட்ணம்

வரலாறு (ம) தொல்லியல் துறைத் தலைவர் (பணி நிறைவு)
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை

திசைக் கூடல் நிகழ்வு #311




நவம்பர் – 20, 2022 – ஞாயிறு மாலை 07:00 இந்திய நேரம்

காணொளி : **https://youtu.be/RUiyEkt9UD8**

**சோழ நாட்டில் புத்தர் சிலைகள்**

முனைவர் பா.ஜம்புலிங்கம்

பௌத்த ஆய்வாளர்
உதவிப் பதிவாளர் (பணி நிறைவு)
தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்

திசைக் கூடல் நிகழ்வு #312




நவம்பர் – 26, 2022 – புதன் மாலை 06:00 இந்திய நேரம்

காணொளி : [https://youtu.be/5HIExBtwx94](https://youtu.be/5HIExBtwx94)

தமிழ் மரபு அறக்கட்டளையின் ஆய்வுப் பயணத்தில் நீங்களும் இணையுங்கள்.

தமிழால் இணைவோம்!

---

தமிழ் மரபு அறக்கட்டளை

https://tamilheritage.org/

---

தமிழ் மரபு அறக்கட்டளையின் செய்திகள்

https://thf-news.tamilheritage.org/

---

"கடிகை" – தமிழ் மரபு முதன்மைநிலை இணையக் கல்விக் கழகம்

https://academy.tamilheritage.org/

---

சங்கம்பீடியா

https://sangathamizh.tamilheritage.org/

## நல்ல சிந்தனை:

*இளையான் அடக்கம் அடக்கம் கிளைபொருள்
இல்லான் கொடையே கொடைப்பயன் - எல்லாம்
ஒறுக்கும் மதுகை உரனுடை யாளன்
பொறுக்கும் பொறையே பொறை.*

- நாலடியார்

**பொருள்:** இளமைப் பருவமுடையவனது புலனடக்கமே அடக்கமெனப்படும். பொருள் குறைந்து இருக்கும் நிலையி லும் ஒருவனது ஈகையே ஈகையாம். அதுபோல எதனையும் அழிக்க வல்ல உடையவனாயிருப்பினும் தமது சினம் செல்லக்கூடிய இடங்களிற் பொறுத்துக் கொள்ளுதலே சிறந்த பொறுமையாகும்.